RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

9842961596, 9384761596
ஹோட்டல் ஸ்ரீ பழனிஸ் சைவம்
HOTEL SREE PALANIS Veg
உணவு ஆர்டர் தேவைக்கு : 80980 97273
மேல்கரை மெயின் ரோடு - மானாமதுரை

# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்

கார்த்திக் மருத்துவமனை
மனோ CT ஸ்கேன்
24 மணி நேர சேவை
சிவகங்கை
Dr.மணிவண்ணன் MBBS.,MD.,
Dr.கார்த்திக்ராஜன் MS.,
No 28 மதுரை ரோடு - சிவகங்கை 630 561 Ph : 04575 241 604, 246516 Cell: 9442341604, 8015741604

சிவகங்கை மலர்-4 இதழ்-31 31 ஜனவரி வெள்ளிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## மகா கும்பமேளாவில் விவிஜபி பாஸ்கள் ரத்து கூட்ட நெரிசல் எதிரொலியால் யோகி அதிரடி

பிரயாக்ராஜ், ஜன.31




மகா கும்பமேளாவில் நடந்த கூட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்த நிலையில், பிரயாக்ராஜில் இன்று (ஜன.30) முதல் விவிஜபி எனப்படும் அதி முக்கிய பிரபலங்களுக்கான சிறப்பு பாஸ் வழங்குவதை ரத்து செய்யும்படி முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

உத்தர பிரதேசத்தில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் புனித நீராட கோடிக்கணக்கான மக்கள் திரண்டதால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்தனர். 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த சம்பவத்தால் உ.பி. அரசின் மீது பல்வேறு விமர் சனங்கள் எழுந்தன. இந்நிலையில் நேற்று பின்னிரவில் முதல்வர் யோகி ஆதித்யநாத் காவல் துறை உயர் அதிகாரிகள், பிரயக்ராஜ், கவுசாம்பி, வாரணாசி, அயோத்தி, மிர்சாபூர், பஸ்தி, ஜவுன்பூர், சித்ரகூட், பண்டா, அம்பேத்கர்நகர், பிரதாப்கர், சண்ட் கபீர் நகர், படோடி, ரேபரேலி, கோரக்பூர் மாவட்ட ஆட்சியர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோருடன் காணொலி வாயிலாக முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்தியுள்ளார்.

அதன் அடிப்படையில் பிரயாக்ராஜில் இன்று (ஜன.30) முதல் விவிஜபி எனப்படும் அதி முக்கிய பிரபலங்களுக்கான சிறப்பு பாஸ் வழங்குதலை ரத்து செய்ய உத்தரவிட்டுள்ளார். மேலும் சில வழிகாட்டு நெறிமுறைகளையும் கடைப்பிடிக்கும் படி முதல்வர் யோகி ஆதித்யநாத் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். அவை:

உத்தர பிரதேச மாநில எல்லைகளில் 'பார்டர் பாயிண்ட்ஸ்' அமைத்து அங்கேயே திரளும் கூட்டத்தை ஒழுங்கபடுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

பிரயாக்ராஜில் இருந்து வெளியே வரும் வாகனங்கள் எந்த நெரிசலிலும் சிக்கிக் கொள்ளாமல் தங்குதடையின்றி வெளியேற போதிய ஏற்பாடுகளைச் செய்யும்படியும் வலியுறுத்தியுள்ளது.

மகா கும்பமேளா பகுதிக்குள் வாகனங்களை அனுமதிக்கக் கூடாது. இதன் மூலம் கூட்டத்தை நிர்வகிக்கலாம்.

விஜபிக்களின் பாஸ்கள் ரத்து செய்யலாம். பிப்ரவரி 4ம் தேதி வரை பிரயாக்ராஜ் மாவட்டத்துக்குள் 4 சக்கர வாகனங்கள் உரிய அனுமதியின்றி வருவதை தடுக்கவும்.

சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுவிடவே கூடாது. சாலையோரங்களில் கடைவிரிக்கும் வியாபாரிகளை காலி இடங்களுக்கு அப்புறப்படுத்த வேண்டும்.

பக்தர்கள் கும்பமேளா பகுதிக்குள் முன்னேறிச் செல்வதை கூட்டத்தைப் பொறுத்து ஒழுங்குபடுத்த வேண்டும். ஒரு வேளை அவர்கள் கும்பமேளா பகுதிக்குள் செல்லும் முன் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு உணவு, தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அப்பகுதியில் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும்.

வாகனங்கள் பார்க்கிங்கை ஒழுங்குபடுத்த வேண்டும். தடுப்பு வேலிகளை வலுவாக அமைத்து கூட்டம் பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் நுழைவதை தடுக்க வேண்டும்.

புனித நீராடலை முடித்துவிட்டு சொந்த ஊர்களுக்குத் திரும்பும் பொருட்டு ரயில் நிலையங்களில் திரளும் கூட்டத்தையும் முறையாக நிர்வகிக்க வேண்டும், இதில் பிரயாக்ராஜ் மாவட்ட ஆட்சியர், ஏடிஜிபி ஆகியோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கூட்டத்துக்கு ஏற்ப கூடுதல் பேருந்து, ரயில் சேவைகளை உறுதிப்படுத்த வேண்டும்.


பிப்ரவரி 3ம் தேதி வசந்த பஞ்சமி நாளில் அம்ரித் ஸ்னாந் நிகழ்வு நடைபெறுகிறது. அதற்கான ஏற்பாடுகளை காவல் துறை டிஜிபியும், தலைமைச் செயலரும் ஆய்வு செய்ய வேண்டும். இவ்வாறு முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவுறுத்தியுள்ளார்.

முன்னதாக, "நிர்வாக சீர்கேடும், பொதுவான பக்தர்களின் நலனில் கவனம் செலுத்தமால் விஜபிக்கள் மீது மட்டும் கவனம் செலுத்தியதுமே இந்தத் துயர சம்பவத்துக்குக் காரணம். மகா கும்பமேளா நிறைவு பெற இன்னும் நிறைய நேரம் இருக்கிறது, இன்னும் பல மகா ஸ்நானங்கள் நடக்க உள்ளன. இன்று நடந்தது போன்ற ஒரு துயர சம்பவம் மீண்டும் நிகழாமல் தடுக்க அரசாங்கம் அமைப்பை பலப்படுத்த வேண்டும்.

விஜபி கலாச்சாரம் கட்டுப்படுத்தப்பட வேண்டும், மேலும், பொது பக்தர்களின் தேவைகளைப்பூர்த்தி செய்ய அரசாங்கம் சிறந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்" என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியிருந்தார். மேலும் பல எதிர்க்கட்சித் தலைவர்களும் இதே கருத்தினை தெரிவித்திருந்தனர். இந்நிலையில், யோகி ஆதித்யநாத் கும்பமேளா புதிய வழிகாட்டுதல் நெறிமுறைகளை வெளியிட்டுள்ளார்.

## அமெரிக்காவில் ராணுவ ஹெலிகாப்டர்-பயணிகள் விமானம் மோதி விபத்து: 18 உடல்கள் மீட்பு

வாஷிங்டன், ஜன.31




அமெரிக்காவில் பயணிகள் விமானம் மற்றும் ராணுவ ஹெலிகாப்டர் மோதிக்கொண்ட விபத்தில் போடோமாக் ஆற்றில் இருந்து 18 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் வாஷிங்டனுக்கு அருகிலுள்ள ரொனால்ட் ரீகன் தேசிய விமான நிலையத்தில் தரையிறங்கும் போது அமெரிக்கன் விமான நிறுவனத்துக்கு சொந்தமான பயணிகள் விமானமும், பயிற்சியில் ஈடுபட்ட ராணுவ ஹெலிகாப்டரும் நடுவானில் மோதி விபத்தில் சிக்கியது. இதில் பயணிகள் விமானம் பல துண்டுகளாக போடோமாக் ஆற்றில் சிதறிக் கிடப்பதாக களத்தில் இருந்து வரும் தகவல் தெரிவிக்கின்றன. ஹெலிகாப்டர் ஆற்றுக்கு அருகே விழுந்துள்ளது.

இந்த விபத்தை அடுத்து ராணுவம், காவல் துறை மற்றும் தீயணைப்பு படையினர் விரைந்து மீட்பு பணியில் இறங்கினர். ஹெலிகாப்டர் மற்றும் படகு மூலமாக அங்கு மீட்பு பணி நடந்து வருகிறது. இதில் இதுவரை 18 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. ரொனால்ட் ரீகன் தேசிய விமான நிலையத்தில் விமான புறப்பாடு மற்றும் தரையிறக்கம் ரத்து செய்யப்பட்டுள்ளது. விமான நிலையத்தில் அவசர நிலை குறித்த அறிவிப்பும் அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்டுள்ளது.

விபத்தில் சிக்கிய அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் 60 பயணிகள் மற்றும் 4 விமான பணியாளர்கள் பயணித்துள்ளனர். அதே போல ராணுவ ஹெலிகாப்டரில் மூன்று ராணுவ வீரர்கள் பயணித்துள்ளனர்.

என்ன நடந்தது? அமெரிக்காவின் கன்சாஸ் மாகாணத்தில் இருந்து 60 பயணிகளுடன் புறப்பட்ட அமெரிக்கன் ஏர் லைன்ஸ் ஈகிள் ஃப்ளைட் '5342' எண் கொண்ட பயணிகள் விமானம், ரொனால்ட் ரீகன் தேசிய விமான நிலைய ஓடுபாதையை இந்திய நேரப்படி இன்று (ஜன.30) காலை 7.30 மணி அளவில் நெருங்கும் போது பயிற்சியில் ஈடுபட்ட ராணுவத்தின் யுஹெச்60 பிளாக் ஹாக் ஹெலிகாப்டர் மீது நடுவானில் மோதியது. தரையில் இருந்து சுமார் 400 அடி உயரத்தில் பயணிகள் விமானமும் ராணுவ ஹெலிகாப்டரும் மோதியது. அதில் தீ பிடித்து விமானம் வெடித்து போடோமாக் ஆற்றில் விழுந்தது. விமானம் சுமார் 225 கிலோ மீட்டர் வேகத்தில் பறந்த போது விபத்து ஏற்பட்டது.

## இஸ்ரோவின் 100வது ராக்கெட் பயணம் வெற்றி என்விஎஸ்02 செயற்கைக்கோள் நிலைநிறுத்தம்

சென்னை, ஜன.31



ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 100வது ராக்கெட்டான ஜிஎஸ்எல்வி எப்15 வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி இஸ்ரோ சாதனை படைத்துள்ளது. அதில் அனுப்பப்பட்ட வழிகாட்டுதல் பயன்பாட்டுக்கான என்விஎஸ் 02 செயற்கைக்கோள் திட்டமிட்டபடி சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டது.

இந்தியாவின் தரை, கடல் மற்றும் வான்வழி போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு பயன்பாட்டுக்கு உதவும் 'இந்திய மண்டல வழிகாட்டுதல் செயற்கைக் கோள் அமைப்பு'ஐ (ஐஆர்என் எஸ்எஸ்) உருவாக்க இஸ்ரோ முடிவு செய்தது. இதற்காக ரூ.1,420 கோடி செலவில் ஐஆர்என்எஸ்எஸ் 1ஏ, 1பி, 1சி, 1டி, 1இ, 1எப், 1ஜி என 7 செயற்கைக்கோள்கள் 2013 முதல் 2016ம் ஆண்டு வரையான காலக்கட்டங்களில் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன. இதன்மூலம் இந்தியாவுக்கு பிரத்யேக வழிகாட்டியாக நாவிக் தொழில்நுட்பம் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இந்த நாவிக் மூலம் நாட்டின் கண்காணிப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கிடையே ஐஆர்என் எஸ்எஸ் திட்டத்தில் பழுதான, ஆயுட்காலம் முடிந்த செயற்கைக் கோள்களுக்கு மாற்றாக வேறு ஒன்றை அனுப்பி பணிகளை தொடருவது அவசியமாகும். ஏனெனில், 7 செயற்கைக் கோள்களும் சிக்கலின்றி இயங்கினால் மட்டுமே அதன் பலன்களை நாம் முழுமையாக பெற முடியும். அந்தவகையில் ஐஆர்என்எஸ்எஸ் வரிசையில் 1ஏ வுக்கு மாற்றாக 1ஐ செயற்கைக்கோள் 2018ம் ஆண்டு விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது. அதேபோல், ஐஆர் என்எஸ்எஸ் 1ஜிக்கு பதிலாக என்விஎஸ்01 செயற்கைக்கோள் 2023 மே 29ல் விண்ணில் செலுத்தப்பட்டது. தொடர்ந்து ஐஆர்என்எஸ்எஸ்1 இக்கு மாற்றாக அதிநவீன வசதிகளுடன் தயாரிக்கப்பட்ட என்விஎஸ்02 செயற்கைக் கோளை ஜிஎஸ்எல்வி எப்12 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த இஸ்ரோ முடிவு செய்தது.

இதற்கான 27.30 மணி நேர கவுன்ட்டவுன் நேற்று முன்தினம் தொடங்கியது. தொடர்ந்து ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தின் 2வது ஏவுதளத்தில் இருந்து ஜிஎஸ்எல்வி ராக்கெட் நேற்று காலை 6.23 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. தரையில் இருந்து புறப்பட்ட 19 நிமிட பயணத்துக்கு பின்னர் 322 கி.மீ. உயரத்தில் திட்டமிடப்பட்ட புவிவட்டப் பாதையில் செயற்கைக்கோள் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. அடுத்த சில நிமிடங்களில் பெங்களூர் ஹசன் மையத்தின் கட்டுப்பாட்டில் என்விஎஸ்2 வந்தது. இனி இது பூமியில் இருந்து குறைந்தபட்சம் 170 கி.மீ தூரமும், அதிகபட்சம் 36,577 கி.மீ தொலைவும் கொண்ட சுற்றுப்பாதையில் சுற்றிவரும்.

என்விஎஸ் செயற்கைக்கோள் 2,250 கிலோ எடை உடையது. இதன் ஆயுட்காலம் 10 ஆண்டுகள். இதில் எல்1, எல்5, சி மற்றும் எஸ் பேண்ட் டிரான்ஸ்பான்டர்கள், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரான ரூபிடியம் அணு கடிகாரம் உட்பட பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப கருவிகள் இடம் பெற்றுள்ளன. இதன்மூலம் இடமறிதல், வழிகாட்டுதல், நேரம் ஆகிய தகவல்களை சிறப்பாக பெற முடியும். இது மற்ற செயற்கைக்கோள்களுடன் சேர்ந்து தரை, கடல், வான்வெளி போக்குவரத்தை கண்காணிக்கும். மேலும், ஜிபிஎஸ்போல் செல்போன் செயலி வழியாக ஓரிடத்தின் தகவல்கள், வழித்தடங்கள் அளித்தல், பேரிடர் மேலாண்மை போன்ற அவசர சேவைகள், இணைய மற்றும் நேரச் சேவைகள் உள்ளிட்ட வசதிகளுக்கும் பயன்படும்.

இது இஸ்ரோவின் 100வது ராக்கெட்டாகும். ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள 2 ஏவுதளங்களில் இருந்து மட்டும் மொத்தம் 100 ராக்கெட் கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 91 வெற்றி பெற்றுள்ளன. நாவிக் செயற்கைக் கோள்கள் மூலமாக நாட்டின் 1,500 கி.மீ பரப்புடைய தெற்காசியப் பகுதிகளின் கடல் மற்றும் எல்லைப்பகுதிகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மலைப் பகுதிகள், பாலைவனங்கள் போன்ற தகவல் தொடர்பு வசதியற்ற பகுதிகளில் ஜிபிஎஸ் முழுமையான தகவல்களை தராது. ஆனால், தெற்காசிய எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் 20 மீட்டர் தூரத்துக்கு துல்லியமான தகவல்களை நாவிக் தொழில்நுட்பம் வழங்கும். நாவிக் திட்டத்துக்காக இன்னும் என்விஎஸ் வரிசையில் 3 செயற்கைக் கோள்கள் இந்தாண்டுக்குள் செலுத்தப்பட உள்ளன.

## கமலின் மநீமவில் இருந்து விலகியது ஏன்? நடிகை வினோதினி விளக்கம்

சென்னை, ஜன.31



நடிகர் கமல்ஹாசனின் அரசியல் கட்சியான மக்கள் நீதி மய்யம் கட்சியில் இருந்து விலகுவதாக நடிகை வினோதினி அறிவித்துள்ளார். இது குறித்து சமூக வலைதள பதிவில் அவர் கூறியதாவது:

"மய்யத்திலிருந்து மிகுந்த வருத்தத்துடன் வெளியேறுகிறேன். அரசியல் பெரிய கடல். அதில் முத்தெடுத்து, மக்களுக்குச் சேர்க்க, தனிப்பட்ட நபரால் ஆக்கப்பூர்வமான விஷயங்கள் செய்ய தேவை எண்ணம், சிந்தனை, செயல், பணம். என்னிடம் எண்ணமும், சிந்தனையும் மட்டுமே உள்ளது என்பதைக் காலம் புரிய வைத்திருக்கிறது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக என் செயலும் பணமும் எனது சொந்த வாழ்க்கைத் தரத்தை ஓரளவு முன்னேற்றுவதற்கும், நான் மேற்கொண்டுள்ள தெருவிலங்குகளின் (நாய், பூனை, ஒரு கோஷாலாவில் என் செலவில் வாழும் சில மாடுகள்) வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்குமே சென்றிருக்கிறது.

இந்தியில் ஒரு வார்த்தை இருக்கிறது. அதை நான் சொல்லிப்பல பேரைத் திட்டியிருக்கிறேன். காம்சோர் என்பதுதான் அந்த வார்த்தை. ஆங்கிலத்தில் சொன்னால் ஷிறீணீநீளீமீகூீ. கடமைகளைத் தட்டிக்கழிக்கும் சோம்பேறி. மய்யத்தில் நான் செய்தது காம்சோர். இதை ஒத்துக்கொள்வதில் தவறில்லை என்றும் இந்த உண்மையை வெளிப்படுத்துவதன் மூலம் எனக்கு மிகப்பெரிய சுதந்திரம் கிடைக்கிறது என்றும் நம்புகிறேன்.

பலர் இங்கு, கட்சி நடக்கிறதா என்றெல்லாம் கேட்பார்கள். எப்பொழுதும் நான் சொல்வது கட்சிக்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று சிந்தியுங்கள். சிறு துளி கூட பெருவெள்ளமாகும். அச்சிறு துளியைக்கூட நான் என் பல அலுவல்களுக்கு நடுவில்தான் செய்திருக்கிறேன். முழுமையாக அல்ல.

கமல்ஹாசன் போன்ற மகத்தான தலைவனைத் தவறவிட்டது தமிழ்நாடு மட்டுமல்ல, வினோதினியும்தான். தொடர்ந்து என் எண்ணமும் சிந்தனையும் தமிழ்நாட்டு அரசியலை மையப்படுத்தியே இருக்கும். ஏனெனில், நான் பிறந்த இம்மண்ணுக்கு என் மக்களுக்கு என்னால் ஆன சிறு மாற்றத்தையாவது, குறைந்த பட்சம் சிந்தனையளிவிலாவது, இப்பிறவியில் கொண்டுவர வேண்டும் என்பதுதான் என் நோக்கம்.

65 வயதிற்கு மேலும் தனது மூத்திரப்பையை கையில் ஏந்தி பகுத்தறிவு புகட்டிய அந்த தாத்தனைப்போல், இன்றும் எங்கள் மய்யத்தில் கொடி நட்டு, போஸ்டரடித்து, உறுப்பினர் சேர்த்து, ஒவ்வொரு தேர்தலின்போதும் அயராது களத்தில் இறங்கி வேலை செய்யும் தொண்டனைப்போல், மக்கள் பிரச்சினை என்றால் களத்தில் குதிக்கும் ஒவ்வொரு கட்சியின் நிர்வாகிபோல் நானும் என் கணக்கைத் தொடங்கும் பொழுதுதான் அது அரசியல் அல்லாது, அறச் செயலாக மாறும்.

அதுவரை, சிந்தனையில் மட்டுமே. அச்சிந்தனையை மெருகேற்றிய கமல்ஹாசனுக்கும் அவர்பின் நின்ற, நிற்கும் அனைவருக்கும் நன்றிகளும் அன்பும். தொடர்ந்து பயணிப்போம். சமரசமற்ற நடுவு நிலையில் இருந்தபடியே" என அவர் கூறியுள்ளார். கடந்த 2023ம் ஆண்டு மக்கள் நீதி மய்யம் கட்சியில் வினோதினி இணைந்தார். இந்த சூழலில் தற்போது கட்சியில் இருந்து விலகி உள்ளார்.

## முதுநிலை மருத்துவ மாணவர் சேர்க்கை தீர்ப்புக்கு எதிராக விரைவில் சீராய்வு மனு: அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை, ஜன.31



சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது: "உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நகல் வந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் சட்டத்துறை வல்லுநர்களுடன் பேசவுள்ளனர். தமிழகத்தின் உரிமைகள் எந்த இடத்திலும் பாதிக்கக்கூடாது. குறிப்பாகஇந்த முதுநிலை மருத்துவப் படிப்புகளில் அரசுப் பணிகளில் இருக்கும் மருத்துவர்களுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் வந்திடாத நிலையில், என்னென்ன மாதிரியான கோரிக்கைகளை வலியுறுத்துவது என்பதெல்லாம் விவாதித்து பின்னர், உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப் படும்.

மற்ற மாநிலங்களுடன் இது தொடர்பாக பேசுவதில் இருக்கக் கூடிய சிரமம் என்னவென்றால், இங்கு BC,MBC, வகுப்பில் இடம் பெற்றுள்ள சமூகங்கள், மற்ற மாநிலங்களில் இருப்பது இல்லை. இங்கு சாதகமாக இருக்கும் அம்சங்கள் மற்ற மாநிலங்களில் இருப்பவர்களுக்கு பாதகமாக இருக்கும். நமக்கு பாதகமாக இருப்பவை அவர்களுக்கு சாதகமாக இருக்கும். எனவே, இதில் மற்ற மாநிலங்களை ஒருங்கிணைப்பது சரியாக இருக்காது. தமிழகத்தின் உரிமைகள் பறிபோகக் கூடாது.

காலம் காலமாக சமூகநீதியையும், இடஒதுக்கீட்டு உரிமையையும் தமிழகம் நிலைநிறுத்தி வருகிறது. இதில் எந்த பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதில் தமிழக முதல்வர் உறுதியாக இருக்கிறார். அந்தவகையில், மிக விரைவில் சட்ட வல்லுநர்களுடன் கலந்துபேசி, உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிரான சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும். உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பால், அரசு மருத்துவர்களுக்குத்தான் பாதிப்பு. அவர்களுக்கு இட ஒதுக்கீடு அடிப்படையில் தந்து கொண்டிருக்கும் உரிமைகள் முழுமையாக பாதிக்கப்படும்.

அதேபோல், தமிழகத்தில் சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களும் இந்த தீர்ப்பால் முழுமையாக பாதிக்கப்படும். ஒட்டுமொத்தமாக 69% இடஒதுக்கீட்டுக்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தும். மருத்துவ மேற்படிப்புகளில் கிட்டத்தட்ட 2,200க்கும் மேற்பட்ட இடங்கள் தமிழக அரசின் வசம் இருக்கிறது. 1,200 முதுநிலை மருத்துவ இடங்கள் பறிபோகும் அபாயம் உள்ளது. இந்த இடங்களைப் பறித்து மற்றவர்களுக்குத் தர வேண்டும் என்ற நோக்கத்தில் செய்யப்படுகிற சூழ்ச்சியாகத்தான் இதைப் பார்க்க வேண்டும்.

ஏற்கெனவே, பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை வழக்கில் இதுபோன்றதொரு சோதனை வந்தது. அப்போது தமிழக முதல்வர் வழக்கு தொடர்ந்து 2022ல் நமக்கு சாதகமான ஒரு தீர்ப்பு வந்தது. அதன்மூலம் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைகளில் அரசு மருத்துவர்களின் உரிமைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அதேபோல், தற்போது வந்துள்ள தீர்ப்பிலும், தமிழக அரசு முதுநிலை மருத்துவர்களுக்கு எவ்வித பாதிப்பும் வராமல், சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

இந்தாண்டு சேர்க்கைக்கு இது பொருந்தாது என்று கூறியுள்ளனர். அடுத்தாண்டு மாணவர் சேர்க்கைக்கு ஆனதுதான் இந்த தீர்ப்பு. அதற்குள் சீராய்வு மனு தாக்கல் செய்து அடுத்த ஆண்டிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் சட்ட வல்லுநர்களுடன் கலந்துபேசி செய்யப்படும்," என்று அவர் கூறினார்.

# கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி இலக்கிய மன்ற நிறைவு விழா



கல்லல் ஜன31

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை அடுத்துள்ள கல்லல் முருகப்பா மேல் நிலைப் பள்ளியில் இலக்கிய மன்ற நிறைவு விழா கொண்டாடப் பட்டது.

தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்வில் தலைமையாசிரியர் அழகப்பன் தலைமை வகித்தார், ஆசிரியர் பிரபு வரவேற்புரை வழங்கினார். ஆசிரியர் பயிற்றுநரும், சிவகங்கை தொல்நடைக் குழு நிறுவனருமான புலவர் கா.காளிராசா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு தமிழுக்கு ஏன் முதன்மை கொடுக்க வேண்டும் தமிழ் மொழியின் சிறப்புகள் என்ன, தொல்காப்பியம் மற்றும் திருக்குறளின் வாழ்வியல் உண்மைகள் உள்ளிட்டவற்றை 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்ற தலைப்பில் மாணவர்களிடத்தில் உரையாற்றினார். தடகள போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும், இந்தக் கல்வியாண்டில் ஒவ்வொரு வகுப்பிலும் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பள்ளி இலக்கிய மன்ற செயலர் செல்வன் ஆகாஷ் நன்றி கூறினார். நாட்டுப்பண் உடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. தமிழாசிரியர்கள் கண்ணதாசன், கற்பகவல்லி, உமாராணி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

# மானாமதுரை எம்.கே.என்.நடுநிலைப்பள்ளியில் தேசத் தந்தை மகாத்மா காந்தி நினைவு நாள் அஞ்சலி



மானாமதுரை ஜன 31

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாரம் தெ.புதுக்கோட்டை அரசு உதவி பெறும் எம்.கே.என்.நடுநிலைப் பள்ளியில் தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களின் 77 வது நினைவு நாள் பள்ளி தலைமை ஆசிரியர் சிவகுருநாதன் தலைமையில் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் மௌனமாக இருந்து அஞ்சலி செலுத்தினர். பின்னர் அனைவரும் மகாத்மா காந்தியின் நினைவு நாளில் சமூகநல்லிணக்கம், அஹிம்சை, சத்தியம், நேர்மையுடன் வாழ்வு வாழ வேண்டும்,

உண்மையும் அஹிம்சையும் வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கொண்டு ஒவ்வொரு நாளும் மனித நேயத்துடன் நடந்து மகாத்மா காந்தியின் சத்தியம் நேர்மை பண்புகளை பின்பற்றி சமத்துவமும் அமைதியும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க உழைப்பேன்." என்று பள்ளி எட்டாம் வகுப்பு ரித்திகா என்ற மாணவி உறுதிமொழி வாசிக்க அனைவரும் உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர்.

# வடகடும்பாடி ஊராட்சியில் பொங்கலை முன்னிட்டு வாலிபால் போட்டி



செங்கல்பட்டு ஜன31

செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம், திருக்கழுக்குன்றம் கிழக்கு ஒன்றியம், வடகடும்பாடி ஊராட்சியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்த சண்முகம் மற்றும் தேவிகா சண்முகம் வடகடும்பாடி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அவர்களது ஏற்பாட்டில் பொங்கலை முன்னிட்டு வாலிபால் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப் பாளராக மாமல்லபுரம் சிறப்பு நிலை பேரூராட்சி துணைத் தலைவர், திருக்கழுக்குன்றம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளருமான மாமல்லபுரம். ஜி. ராகவன் பி.எஸ்.சி, கலந்துகொண்டு சிறப்பாக விளையாடிய வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றி கோப்பையை பரிசாக வாங்கினார்.

# குடியரசு தினத்தை முன்னிட்டு கடப்பேரி நியூ ஸ்டார் கிரிக்கெட் கிளப் சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி



தாம்பரம் ஜன 31


குடியரசு தினத்தை முன்னிட்டு கடப்பேரி நியூ ஸ்டார் கிரிக்கெட் கிளப் சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உள்ள டிடிகே மைதானத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு கடப்பேரி நியூ ஸ்டார் கிரிக்கெட் கிளப் சார்பில் நடத்திய மாபெரும் கிரிக்கெட் போட்டி ஹரிதாஸ் நாகரத்தினம் ராஜேஷ் சுதாகர் அவர்கள் தலைமையில் பிரவீன் ஆண்டனி ரீகன் தனசேகரன் சிவராமன் காமராஜ் விக்னேஷ் கணபதி விக்னேஷ் மாறன் ஏங்கல்ஸ் லோகேஷ் என்கின்ற விஷால் முன்னிலையில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி வெற்றி பெற்ற அணியினருக்கு முதல் பரிசாக வெற்றிக்கோப்பை பரிசுத்தொகை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு பொதுச் செயலாளர் intuc, தமிழ்நாடு பொதுச் செயல் தலைவர் tneeu ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு இரண்டாம் பரிசு மூன்றாம் பரிசு வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தனர் இதில் கிரிக்கெட் வீரர்கள் வீராங்கனைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# ஈசிஆர் சம்பவம்.. பெண்களை மிரட்டிய இளைஞர்களை பிடிக்க 5 தனிப்படைகள் அமைப்பு



சென்னை, ஜன.31

சென்னை ஈசிஆர் சாலையில் முட்டுக்காடு அருகே கடந்த வெள்ளிக் கிழமை அதிகாலை பெண்கள் சென்ற காரை திமுக கொடிக் கட்டிய 2 கார்களில் இளைஞர்கள் விரட்டிச் சென்றது தொடர்பான வீடியோ வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதில் சாலையின் குறுக்கே காரை நிறுத்தி பெண்களின் காரை மறித்த காட்சிகளும், அப்போது பெண்கள் தங்களின் காரை ரிவர்ஸ் எடுத்த காட்சிகளும் இடம்பெற்றிருந்தது.

மேலும் காரில் இருந்து இறங்கிய இளைஞர் ஒருவர், பெண்களின் காரை நோக்கி வேகமாக ஓடி வந்து தகாத வார்த்தைகளாலும் பேசினார். இந்த பதைபதைக்க வைக்கும் காட்சிகள் அனைத்தும் சமூக வலைதளங்களில் பெரும் வைரலானது. அதிமுக, பாஜக, பாமக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இந்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. பெண்களை மிரட்டிய திமுகவினரை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

மேலும் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு மோசமடைந்துள்ளதற்கு இந்த சம்பவமே உதாரணம் என்றும் விமர்சித்து வருகின்றனர். சமூக வலைதளங்களிலும் திமுக ஆட்சியை விமர்சித்து கருத்துகள் பதிவிடப்பட்டு வருகின்றன. இந்நிலையில் பாதிக்கப்பட்ட பெண்கள் அளித்த புகாரின் அடிப்படையில் கானத்தூர் போலீசார் 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இளம்பெண்களை காரில் துரத்தியது யார்? என்பது குறித்து போலீசார் நடத்திய விசாரணையில் பெண்கள் சென்ற கார் இளைஞர்களின் காரை உரசி சென்றதாகவும், மன்னிப்பு கூட கேட்காமல் அவர்கள் சென்றதால் நியாயம் கேட்க பெண்களின் காரை இளைஞர்கள் துரத்தியதாகவும் போலீசார் தெரிவித்திருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 2 கார்களில் வந்த இளைஞர்களை தேடி வரும் போலீசார் அவர்களை பிடிக்க தனிப்படை அமைத்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக ஏற்கனவே 4 தனிப்படைகள் அமைக்கப்பட்ட நிலையில் தற்போது மேலும் ஒரு தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. காரின் பதிவெண்ணை வைத்து தேடியதில் கார் விற்பனை செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதனிடையே இளைஞர்கள் துரத்தியதால் பெண்கள் மூன்று முறை தங்களின் காரை ரிவர்ஸ் எடுக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

# பெருங்களத்தூர் பகுதியில் தாம்பரம் மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



பெருங்களத்தூர் ஜன31

தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் பெருங்களத்தூர் பகுதியில் அடிப்படை வசதிகளை கூட நிறைவேற்றத் தவறிய தி.மு.க. அரசையும், தாம்பரம் மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாற்றத்தை எதிர்பார்த்ததால் இன்று வீதிக்கு வந்து போராடும் நிலை ஏற்பட்டுள்ளது. 2026ல் நாம் திமுகவிற்கு ஒரு பாடம் கற்றுத் தர வேண்டும் என்று கழக அமைப்புச் செயலாளர் வடசென்னை தெற்கு கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் பேசினார்.

மேற்கு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் பெருங்களத்தூர் பகுதியில் அடிப்படை வசதிகளை கூட நிறைவேற்றத் தவறிய விடியா தி.மு.க.வின் ஸ்டாலின் மாடல் அரசு மற்றும் தாம்பரம் மாநகராட்சிநிர்வாகத்தை கண்டித்தும், மக்களின் அடிப்படை தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும் செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பெருங்களத்தூர் காமராஜர் நெடுஞ்சாலை ரவுண்டானா அருகில் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழக அமைப்புச் செயலாளர் வடசென்னை தெற்கு கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் தலைமை வகித்தார். செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் முன்னிலை வகித்தார். கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா, கழக மகளிர் அணி இணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கணிதா சம்பத், கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.இராமச்சந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.எஸ்.மலர்மன்னன், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் என்.சி.கிருஷ்ணன், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏ.எம்.பொன்னுசாமி, பி.கே. பரசுராமன், பகுதி, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள் எம்.கூத்தன், எல்லார் செழியன், ஏ.கோபிநாதன், எம்.தேவேந்திரன், அனகை பி.வேலாயுதம், இ.சம்பத்குமார், மதுரைப்பாக்கம் எம்.பி.மனோகரன், பா.அப்பு (எ) வெங்கடேசன், வழக் கறிஞர் எம்.கே.சதீஷ், ஆர்.எஸ்.சுபாஷ், த.ஜெயப்பிரகாஷ், ஆர்.அருணாசலம், கூடுவாஞ்சேரி டி.சீனிவாசன், டி.எஸ்.ரவிகுமார், வி.ஆர். செந்தில்குமார், மாவட்ட அணி செயலாளர்கள் பா.ராஜப்பா, எம்.ஜி.கே.கோபிகண்ணன், ஜி.எம்.சாந்தகுமார், க.விஜய சங்கர், எம்.ஹரிகிருஷ்ணன், பி.ஆர்.கணேஷ்குமார், பி. சீனிவான், டாக்டர் பாலாஜி ஸ்ரீகாந்த், பா.காசிராஜன், முன்னாள் பேரூர் கழகச் செயலாளர் ஏ.வி.சம்பத்குமார், பொதுக் குழு உறுப்பினர் தா.மு. துரைவேல், தாம்பரம் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சேலையூர் சங்கர், மாமன்ற உறுப்பினர்கள் ஸ்டார் பிரபா, வாணி சுரேஷ்பாபு, வாட்டர் ராஜ். பெங்களத்தூர் பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.ஜெகதீசன், எம்.சங்கீதா தேவி, டி.காஞ்சனா, சி.ஹரிஹரன், இ.பீட்டர் நாகராஜ், ஜி.வரதம்மாள், டி.சீனிவாசன், எஸ்.நாரயாணன், வட்டக் கழகச் செயலாளர்கள் ஜி.அர்ஜுணன், டி.எல். சத்யபிரகாஷ், பி.பிரேம்குமார், எஸ்.சுரேஷ்குமார், கே.பச்சையப்பன், வி.கணேஷ் பிரதாப், ஆர்.அசோக், எஸ்.ஆலன் லயன்ஸ், ஆர்.பிரபாகரன், கேபிள் குணா, ஜேசுராஜ், இரா. நாகராஜன், மற்றும் நிர்வாகிகள் கே.அசோகன், டி.பிரசாந்த், பி.குமார், முடிச்சூர் ஸ்ரீ பாஸ்கர், தவமணி, கஜேந்திரன், சிட்டி பாபு, ரமேஷ், சற்குணம், சீனிவாசன், கலை, சரவணன், கபாலி, உன்னி, ராஜா, திருமலை, லலிதா உட்பட மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகரக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் உட்பட பலரங கலந்துகொண்டனர். கண்டன ஆர்ப்பாட்டத்தின் முடிவில் பெருங்களத்தூர் பகுதி கழகச் செயலாளர் ஜெ.சீனுபாபு நன்றியுரையாற்றினார்.

# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர்கள் சங்கம் சார்பில் பழனி பேருந்து நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம்



பழனி ஜன.31

தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை சாலை பணியாளர்கள் சங்கம் சார்பில் நெடுஞ்சாலை துறையை தனியாருக்கு தாரை வார்க்கும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் ஆணையம் அமைத்து வெளியிடப்பட்ட அரசாணை 140 திரும்ப பெற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாநில தலைவர் தலைமையில் பழனி பேருந்து நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் பழனி பேருந்து நிலையம் முன்பாக தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை சாலை பணியாளர்கள் சங்கம் சார்பில் நெடுஞ்சாலை துறையை தனியாருக்கு தாரை வார்க்கும் ஆணையத்தை திரும்ப பெற வேண்டும் எனவும், மாநில நெடுஞ்சாலை ஆணையம் அமைக்கப்பட்ட அரசாணை 140 திரும்ப பெற வேண்டும் சாலை பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை சென்னை உயர் நீதிமன்ற ஆணைப்படி பணிக் காலமாக முறைப்படுத்தி உத்தரவு வழங்க வேண்டும், மாநில நெடுஞ்சாலை செயல்படுத்துவதால் தனியார் கார்ப்பரேட் கம்பெனிகள் 12,349 கிலோமீட்டர் சாலைகள் 210க்கு மேற்பட்ட சுங்கச்சாவடியில் அமைத்து மக்களிடம் சுங்க வரிசையில் கொள்ளையை அனுமதிக்க கூடாது, மாநில நெடுஞ்சாலை ஆணையத்தால் 50 ஆயிரம் அரசு பணியாளர்கள் ஒழிக்கப்படும் இளைஞர்களுக்கான வேலை பறிபோகும் அபாயம் உள்ளதாகவும் மாநில நெடுஞ்சாலைகள் அனைத்து அரசியல் நிர்வகித்து பராமரித்திர வேண்டும் உள்ளிட்ட கோரிக் கைகளை வலியுறுத்தி நடைபெற்ற ஆர்பாட்டத்தில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர்கள் சங்கத்தின் மாநில தலைவர் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தொடர்ந்து மக்கள் சந்திப்பு கையெழுத்தை இயக்கம் நடைபெற்றது ஒரு கோடி கையெழுத்துக்களை பெற்று தமிழக அரசிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் 30 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




கோவாவில் நடைபெற்ற நேஷனல் மற்றும் இன்டர்நேஷனல் பாம் 1 பாம் 2 ஆகிய இரண்டு போட்டியும் ஒரே நாளில் களம் இறங்கி வெற்றிவாகை சூடிய தேனி மாவட்டம் சின்னமனூர் விரமங்கை வேலு நாச்சியார் சிலம்ப கலைக்கூடம் ஆசான் ஈஸ்வரன் தலைமையில் கலந்து கொண்டு முதல் இரண்டு பரிசுகளை வென்று வெற்றி வாகை சூடிய வீராங்கனைகள் முதல் பரிசு பிருந்தா ஸ்ரீ ஜனனி முகிலன் பாவேஷ் ஹரிணி திவீஸ் சிவப்ரித்தா ஜிஷ்ணு தனுர் வேலு இரண்டாம் பரிசு மித்ரன் பரிசு மற்றும் பதக்கங்களை பெற்று பெருமை சேர்த்தனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் இருவார கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம்

சிவகங்கை, ஜன.31

சிவகங்கை மாவட்டத்தில் "கிராம மக்களின் பொருளாதார பாதிப்பை தடுக்க, ஆண்டு தோறும் இருவார கோழிக் கழிச்சல் தடுப்பூசி முகாம்" நடைபெறும்.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் வருகின்ற 01.02.2025 முதல் 14.02.2025 வரை இரு வாரக் கோழிக் கழிச்சல்நோய் தடுப்பூசி முகாம் நடத்திட திட்டமிடப்பட்டு, 2,40,000 கோழிகளுக்கு தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதையொட்டி சிவ கங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து கால் நடை மருத்துவ நிலையங்களிலும் கால்நடை பராமரிப்புத் துறையினரால் தடுப்பூசி செலுத்தும் பணி மேற் கொள்ளப்படவுள்ளது.



கோழிக்கழிச்சல் நோய் (வைரஸ் நச்சுயிர்) அனைத்து வயது கோழிகளையும் தாக்கும் தன்மை உடையது. இந்நோயானது, 8 வாரத்திற்கு மேற்பட்ட கோழிக்குஞ்சுகளுக்கு அதிகம் பாதிப்பினை ஏற்படுத்தும்.

மேலும், கோழிக்கழிச்சல் நோயின் அறிகுறிகளாக கோழிகள் உடல் நலமின்றி உறங்கியபடி இருக்கும். தீவனம், தண்ணீர் எடுத்துக்கொள்ளாது. கோழி எச்சம் வெள்ளை மற்றும் பச்சை நிறத்தில் அதிக துர்நாற்றத்துடன் காணப்படும். கோழிகள் வெயில் காலங்களில் மிகவும் பாதிக்கப்படுவதால், ஆண்டுதோறும் வெயில்காலம் தொடங்கும் பருவமான பிப்ரவரி மாதத்தில் இருவாரக் கோழிக் கழிச்சல் தடுப்பூசி முகாம் நடத்தப்படும்.

எனவே, விவசாயப் பெருமக்கள் மற்றும் கோழி வளர்ப்போர் அனைவரும் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் நடைபெறும் தடுப்பூசி முகாம்களில், தங்களது கோழிகளுக்கு தடுப்பூசி செலுத்தி கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தேசிய தொழுநோய் ஒழிப்புத்திட்டம் ஸ்பர்ஸ் தொழுநோய் விழிப்புணர்வு ஊர்தியை மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா கொடியசைத்து துவக்கி வைத்தார்.



திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் மற்றும் ஆணையாளர் சு.ராமமூர்த்தி தலைமையில் நேற்று மைய அலுவலக வளாகத்தில் தீண்டாமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதி மொழியினை எடுத்துக்கொண்டனர். உடன் துணை மேயர் பாலசுப்பிரமணியம் துணை ஆணையாளர் சுந்தரராஜன் தலைமை பொறியாளர் ரா. செல்வநாயகம் உதவி ஆணையாளர் (கணக்கு பொறுப்பு) தங்கவேல் ராஜன் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.



திருப்பூர் மாவட்டம் மாநகராட்சி வார்டு எண் 1ல் மாநகராட்சிக்கு நடுநிலைப் பள்ளியில் அடிப்படை வசதிகள் குறித்து மாநகராட்சி ஆணையாளர் சு.ராமமூர்த்தி ஆய்வு மேற்கொண்டார் உடன் இளநிலை பொறியாளர் கணேஷ் பள்ளி தலைமை ஆசிரியர் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



திருப்பூர் மாவட்டம் மாநகராட்சி அணைப்பாளையம் பகுதியில் அம்ருத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருவதை மாநகராட்சி ஆணையாளர் சு.ராமமூர்த்தி கடந்த 28ஆம் தேதி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் உடன் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர் ..



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளகத்தில் நேற்று (30.01.2025) மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் சேதுராமலிங்கம் தலைமையில் அனைத்து அரசு அலுவலர்கள் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்..

# தேனி நாடார் சரசுவதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வேதியியல் துறை சார்பில் பன்னாட்டு கருத்தரங்கம்




பெரியகுளம் ஜன 31

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடபுதுபட்டியில் உள்ள தேனி நாடார் சரசுவதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "மருந்தாக்க வேதியியல் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல்" பன்னாட்டு கருத்தரங்கம் இரண்டு நாட்கள் நடைபெற்றது. வேதியியல் துறையின் தலைவர் முனைவர் தேவி மீனாட்சி வரவேற்புரை ஆற்றினார்.

தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன் தலைமை தாங்கினார். உபதலைவர் கணேஷ், பொதுச் செயலாளர் ஆனந்தவேல் மற்றும் பொருளாளர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயலாளர் காசிபிரபு துவக்க உரையாற்றினார்.

மாணவ, மாணவியர்களின் 45 ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய பன்னாட்டு கருத்தரங்கு புத்தகத்தை கல்லூரி செயலாளர் காசி பிரபு வெளியிட சிறப்பு விருந்தினர்கள் பெற்றுக்கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற மத்திய அமைச்சகம் வெடி பொருட்களின் கூட்டுத்தலைமை கட்டுப்பாட்டாளர் முனைவர் தாணுலிங்கம், விருதுநகர் வி.எச்.என்.எஸ்.என் கல்லூரியின் இணை பேராசிரியர் முனைவர் சாமி, மலேசியா மோனாஷ் பல்கலைகழக ஸ்கூல் ஆஃப் இன்ஜினியரிங் முனைவர் கௌதமன், கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலைக்கழக வேதியியல் துறை உதவி பேராசிரியை முனைவர் ஹேமமாலினி, காந்தி கிராமம் கிராமிய நிறுவன முன்னாள் மாணவி முனைவர் சரிகா லட்சுமி, பெங்களூரு விஜடிஸ்டொலிட்டி அஸ்யூரன்ஸ் நிபுணர் பாலாஜி குழந்தைவேலு, நத்தம் என்.பி.ஆர்.சி. இ.டி. கல்லூரி இயற்பியல் பேராசிரியர் சதீஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த பன்னாட்டு கருத்தரங்கத்தில் நாடார் சரசுவதி கல்லூரி பேராசிரியர்கள் மாணவிகள் மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவ மாணவியர் உட்பட 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மேலும் 5 சிறந்த ஆய்வு கட்டுரைகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் முடிவில் வேதியியல் துறையின் ஒருங்கிணைப்பாளர் சித்ராதேவி நன்றி கூறினார்.

# தேனி நாடார் சரஸ்வதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அசோலா வளர்ப்பு பயிற்சி



பெரியகுளம் ஜன 31

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடபுதுப்பட்டியில் உள்ள தேனி நாடார் சரசுவதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் விலங்கியல் துறை மற்றும் ஐஐசி சார்பில் அசோலா வளர்ப்பு இரண்டு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு விலங்கியல் துறை தலைவர் முனைவர் கனிமொழி வரவேற்புரை ஆற்றினார்.

தேனி மேலப் பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன் தலைமை வழங்கினார். உப தலைவர் கணேஷ், பொதுச் செயலாளர் ஆனந்தவேல், பொருளாளர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி செயலாளர் காசி பிரபு, இணைச் செயலாளர்கள் செண்பகராஜன், அருண், கல்லூரி முதல்வர் முனைவர் சித்ரா, அகடமிக் டீன் கோமதி, சிஓஇ முனைவர் சரண்யா, துணை முதல்வர்கள் சுசிலா சங்கர், முனைவர் கிருஷ்ண வேணி, விடுதி காப்பாளர் உமா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி செயலாளர் காசி பிரபு அசோலா பயிற்சி திட்டத்தை துவக்கி வைத்தார்.

தேனி கலை மற்றும் அறிவியல் கல்லூரி தாவரவியல் துறைத்தலைவர் முனைவர் உத்திரபாண்டி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் "அசோலா என்பது தண்ணீரில் மிதக்கும் பெரணி வகையை சார்ந்த தாவரம். இதில் 2530 விழுக்காடு புரதம் உள்ளது. இயற்கை முறை பயிர் வகை சார்ந்துள்ள தாவரம் மீன், பறவை, கால்நடை போன்ற விலங்கினங்களுக்கு புரத சத்து நிறைந்த ஊட்ட சத்து அதிகம் உள்ள உணவாகும். அசோலா வளர்ப்புக்கு 8 அடி நீளம், 5 அடி அகலம் மற்றும் 1 அடி ஆழம் குழி அமைத்து, நீர் ஊடுருவாமல் தார்பாயை செம்மண் போர் மண் உலர்ந்த மாட்டு சாணம் மற்றும் நீர் நிரப்பி அதில் அசோலா விதையை தூவ வேண்டும். அசோலா தாவர பயிர் முறையை நிழல் பகுதியில் அமைத்தால் நல்லது" என்று பேசினார்.

இந்த திட்டத்தில் 80க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். நிகழ்ச்சியின் முடிவில் உதவி பேராசிரியர் முனைவர் தனலட்சுமி நன்றி கூறினார்.

# சிவகங்கை மாவட்டத்தில் தொடக்கநிலை மாணவர்களுக்கு துளிர் திறனறிதல் தேர்வு



சிவகங்கை ஜன31

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக 4, 5 வகுப்பு மாணவர்களுக்கு தொடக்க நிலை துளிர் திறனறிதல் தேர்வு நடைபெற்றது.

30க்கும் மேற்பட்ட பள்ளிகளில் உள்ள 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இத் தேர்வில் கலந்து கொண்டனர்.

போட்டித் தேர்வுகளை எதிர் காலத்தில் எளிதாக எதிர் கொள்ளும் வகையில் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி காளையார்கோவில் காரைக்குடி மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஜி ஜி நகர் இந்திராநகர் புனித மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சிவகங்கை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் கீழக் கோட்டை கௌரி பட்டி முடிக்கரை காஞ்சரம் மாரநாடு N வைரவன் பட்டி ஜி பழையூர் திருப்புவனம் கீழராங்கியம் கருங்காலக்குடி திருவள்ளூர் பிடாரனேந்தல் காஞ்சிரங்கால் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகள் பாகனேரி அழகிச்சிபட்டி ஸி சி தொடக்கப்பள்ளி வலையப் பட்டி இந்து தொடக்கப்பள்ளி கிராம்புளி ராமகிருஷ்ணா யோகிராம் மணிமாறன் கோட்டைமூலை கார்த்திகேயன் பாலமுருகன் நர்சரி தொடக்கப் பள்ளிகளிலல சிறப்பாக பங்கேற்றனர்.

தேர்வுக்கான ஏற் பாட்டினை தமிழ்நாடு அறிவியல இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி சிறப்பாக செய்திருந்தார்.

# ரயில்வே அமைச்சகம் வழங்கும் 33% மானியத்துடன் காஷ்மீருக்கு உல்லாச ரயில் பயணத்தை மேற்கொள்ளலாம்

மதுரை, 31

இந்தியன் ரயில்வே, சவுத் ஸ்டார் ரயில் இந்தியாவின் முதல் பாரத் கௌரவ் ரயில் (ரயில் எண் 06903/04) மற்றும் டூர் டைம்ஸ் சுற்றுலா ரயில் ஆபரேட்டர் காஷ்மீர், ஆக்ரா, டெல்லி மற்றும் அமிர்தசரஸுக்கு கோடை விடுமுறை சிறப்பு ரயிலை அறிவித்துள்ளது. 15 நாள் அனைத்தையும் உள்ளடக்கிய இந்திய ரயில்வேயின் சிறப்பு ரயில் பேக்கேஜ் சுற்றுப் பயணம் ஏப்ரல் 02, 2025 அன்று தொடங்குகிறது.




1 AC / 2 AC / 3AC / SL ரயில் | AC/NAC தங்கும் அறை வசதி | தென்னிந்திய சைவ உணவு | சுற்றிப்பார்த்தல் | மேலாளர் - பாதுகாவலர் வசதி | ஒலிப்பெருக்கி வசதி | CCTV கேமரா | சுற்றுலா தளங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்கு செல்லும்போது அன்றைக்கு தேவையான உடமைகளை மட்டும் எடுத்து சென்றால் போதும், மீதி உடமைகள் இரயிலிலேயே பாதுகாக்கப்படும் | Economy & Deluxe பயண வகைகள் | காப்பீடு.

இது மூத்த குடிமக்களின் சிறப்புப் பயணம். மேலும், மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்கள் LTC & LFC வசதிகளைப் பெறலாம். இந்த பேக்கேஜ் டூர் ரயில்வே அமைச்சகத்தின் 33% மானியத்துடன் வருகிறது.

அனைத்தும் உட்பட கட்டணம்

*Rs. 49, 900 - 3AC * Rs. 60, 100 - 2AC * Rs. 65, 500 - 1AC

இந்த டிக்கெட்டை எங்கள் இணையதளம் மற்றும் எங்கள் உதவி எண்கள் அல்லது எங்கள் அலுவலகம் தவிர வேறு எங்கும் முன்பதிவு செய்ய முடியாது

முன்பதிவுக்கு: 7305858585, இணையதள முன்பதிவுக்கு: www.tourtimes.in

என இந்திய ரயில்வே சவுத்ஸ்டார் ரயில் இயக்குநர் விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

மாலை தந்தி






சிவகங்கை மாவட்டம் ஜனவரி 1 முதல் 31 வரை போக்குவரத்து மாத விழா அனுசரிக்கப்பட்டு வருகிறது சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் கொடியசைத்து இன்று துவக்கி வைத்தார். வட்டார போக்குவரத்து அலுவலர் மூக்கன், சிவகங்கை உதவி காவல் கண்காணிப்பாளர் கலை கதிரவன், சிவகங்கை போக்குவரத்து காவல் ஆய்வாளர் சக்தி இசக்கி போக்குவரத்து சார்பு ஆய்வாளர் அழகுராணி இருசக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிந்து சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் சார்பாக மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது அதில் ஒரு பகுதியாக முதுகுளத்தூரில் தாலுகா துணைத் தலைவர் உ.கணேசன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் கே.கணேசன் கண்டன உரையாற்றினார். தாலுகா செயலாளர் அங்கதன், தாலுகா பொருளாளர் முருகேசன், மாவட்ட குழு உறுப்பினர் போஸ், வீரச்செம்பன், ராமையா ஆண்டாள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் காசிதர்மம் ஊராட்சியில் ஒரு லட்சம் லிட்டர்கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மாநிலங்களவை உறுப்பினர் ஜி. கே வாசன்அவர்கள் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூபாய் 30.15 லட்சம் மதிப்பீட்டில் த.மா.க மாவட்ட தலைவரும் முன்னாள ஒன்றிய பெருந்தலைவருமான. எஸ்.ஆர். அய்யாதுரை மற்றும் காசிதர்மம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தங்கம் அய்யாதுரை ஆகியோர் வேண்டு கோளுக்கிணங்க கட்டப்பட்டு பொதுமக்கள் பயன் பாட்டிற்காக இன்று (ஜன31) அர்பணிக்கப்படுகிறது.

## வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் சார்பில் காத்திருப்பு போராட்டம்

வத்தலக்குண்டு ஜன.31

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 100 நாள் வேலை வாய்ப்பு தொடர்ந்து வழங்க வேண்டும் என வலியுறுத்தி அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் சார்பில் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.



போராட்டத்திற்கு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் சங்க மாவட்ட தலைவர் ஜெயந்தி தலைமை வைத்தார். நிலக்கோட்டை தொகுதி சி பி எம் தலைவர் சசிகுமார் முன்னிலை வைத்தார். மாநில குழு உறுப்பினர் சிவக்குமார் வரவேற்று பேசினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் ஸ்டாலின் குணசேகரன் மற்றும் மாவட்ட குழு உறுப்பினர் தங்கமணி ஆகியோர் கலந்து கொண்டு போராட்டத்தை நடத்தினார்கள் போராட்டத்தில் 200க்கும் மேற்பட்ட கிராம மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர். அவர்கள் 100 நாள் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என தமிழக அரசு வலியுறுத்தி கோசமிட்டனர். காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் வத்தல குண்டு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் முனியாண்டி கொம்பபட்டி ஊராட்சி செயலாளர் பிரபு மற்றும் மாற்றுத் திறனாளிகள் முக்கிய நிர்வாகிகள் சமரச பேச்சு வார்த்தை நடத்தினார்கள் அப்போது புதிதாக கண்மாய்கள் உருவாக்கி உங்களுக்கு உண்டான வேலைகள் தரப்படும் அவ்வாறு புதிய கம்மாய் உருவாவதற்கு இடமில்லாமல் இருந்தால் பழைய கம்மாய்களை தூர் வருவார் அல்லது மருத்துவ வாய்க்கால் சரி பண்ணுவது என்பது போன்ற வேலைகளை உருவாக்கி 10 நாட்களுக்குள் உங்களுக்கு உண்டான வேலை வழங்கப்படும் என வட்டார வளர்ச்சி அலுவலர் முனியாண்டி கூறினார்.

பின்புகாத்திருப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் சமாதானம் ஆகி கலைந்து சென்றனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 28 வது வார்டுக்குட்பட்ட குறுந்தெரு பூங்காவில் அமைந்துள்ள நியாயவிலைக்கடை ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சிமேயர் ரெ.மகேஷ் துவங்கி வைத்தார். உடன் மாமன்ற உறுப்பினர் அனந்த லெட்சுமி, செயற்குழு உறுப்பினர் .சதாசிவம் மாவட்ட சுற்று சுழல் அணி அமைப்பாளர் டாக்டர் ஆனந்த் வட்ட செயலாளர் .முத்துகிருஷ்ணன் மற்றும் தி மு க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் பாரதி நகர் புதுநகர் வைகைநகர் காட்டு பரமக்குடியில் 100 KV திறன் கொண்ட புதிய மின்மாற்றியை சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் திறந்து வைத்தார். உடன் நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி நகர் மன்ற உறுப்பினர்கள் ஜீவரத்தினம்,தேவகிட்டு, ராதா, அமுதா ராணி, உதவி செயற் பொறியாளர் கங்காதரன்,உதவி மின் பொறியாளர் சுந்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கிலிருந்து அதிமுக பிரமுகர்கள் விடுதலை

ஆண்டிபட்டி, ஜன.31

2011 ஆம் ஆண்டுநடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட அதிமுக சார்பாக அறிவிக்கப்பட்ட போடி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திரு.ஓ.பன்னீர்செல்வம் மற்றும் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திரு. தங்க தமிழ் செல்வன் ஆகியோர்களை ஆண்டிபட்டி அருகே உள்ள கணவாய் மலை தர்ம சாஸ்தா கோவில் முன்பு அப்போதைய ஒன்றிய கழக செயலாளர் ரி.பால்பாண்டியன் மாவட்ட மாணவரணி பொருளாளர் P.முருகேசன் ராஜதானி P.S.நடராஜன் மற்றும் M.P.பழனி ஆகியோர் தலைமையில் தேர்தல் விதிமுறைகளை மீறி அனுமதியில்லாமல் 70 க்கும் மேற்பட்ட வாகனங்களில் கழக நிர்வாகிகளை அழைத்துச் சென்று வேட்பாளர்களை வரவேற்றதாக வழக்கு தொடரப்பட்டு 14 ஆண்டுகள் நடைபெற்று வந்த வழக்கிலிருந்து ஜன.30 இன்று அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.






ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் ஈரோடு கிழக்கு 98 சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் முன்னிட்டு 18 வயது பூர்த்தியான வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற வாகன விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மகாத்மா காந்தியடிகளின் நினைவு தினத்தையொட்டி, தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியேற்பு நிகழ்ச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி தலைமையில் நடைபெற்றது.

## ரயில்வே துறையை கண்டித்து பாவூர்சத்திரத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

தென்காசி, ஜன : 31

தென்காசி நெல்லை உள்ளிட்ட தென் மாவட்டங்களை ரயில்வே துறை முற்றிலும் புறக்கணிப்பதாக கூறி தென்காசி மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




பாவூர்சத்திரம் பஸ் ஸ்டாண்ட் அருகே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் தலைமை வகித்தார். நெல்லை பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் குரூஸ் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். கீழப்பாவூர் மேற்கு வட்டார காங்கிரஸ் தலைவர் கே பி குமார் பாண்டியன் வரவேற்று பேசினார். மாவட்ட கவுன்சிலரும், மாவட்ட துணை தலைவருமான சுப்பிரமணியன் தொகுப்புரை வழங்கினார்.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் எம்பி ராமசுப்பு, கொடிக்குறிச்சி முத்தையா, முன்னாள் எம்எல்ஏ ரவி அண்ணன் மாவட்ட பொருளாளர் முரளி ராஜா, மாவட்ட மகளிரணி தலைவர் பூமாதேவி முருகன், மாநில செயலாளர் செல்வராஜ் சுரண்டை நகராட்சி சேர்மன் வள்ளி முருகன், மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் உதயகிருஷ்ணன், ரயில்வே ஆலோசனை குழு உறுப்பினர் பாண்டியராஜன், வணிகர் சங்க பேரமைப்பு தெற்கு மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணியன், தென்காசி நகர பொருளாளர் ஈஸ்வரன் உள்ளிட்டார் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்கள்.





சிவகங்கை மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலர் மூக்கன் மற்றும் போக்குவரத்து ஆய்வாளர்சக்தி இசக்கி இணைந்து சிவகங்கை அரசு மகளிர் பள்ளியில் மாணவிகளுக்கு தலைக்கவசத்தின் அவசியம் மற்றும் விபத்துக்களால் ஏற்படும் இழப்பு போன்ற விளக்கங்களை பசுமரத்து ஆணியில் எவ்வாறு பதியு அவ்வாறு அவர்களின் மனதில் தங்கள் குடும்பத்தார்களுக்கும் தங்கள் சகோதரருக்கும் எடுத்துரைக்குமாறு எளிமையாக புரியும் வண்ணமாக உரையாற்றினர்...

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161